CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 62 /2017

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபால் | Father's/Husband's Name : கந்தசாமி | |
| Village | : கன்னியப்பபிள்ளைப்பட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025

**முதல் விசாரணையின் தொடர்ச்சி:**

சாட்சி சத்தியபிரமாணம் செய்துவிட்டு கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

| **வ.எண்** | **தேதி** | **சான்றாவணம்** | **விபரம்** | **தன்மை** |
|---|---|---|---|---|
| 1. | – | **நீ.ம.சா.ஆ.1** | நீதிமன்ற ஆணையரின் அறிக்கை | அசல் |
| 2. | – | **நீ.ம.சா.ஆ.2** | நீதிமன்ற ஆணையரின் வரைபடம் | அசல் |
| 3. | – | **நீ.ம.சா.ஆ.3** | சர்வேயர் அறிக்கை மற்றும் வரைபடம் | அசல் |
| 4. | – | **வா.சா.ஆ.16** | நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு வாதி தரப்பில் ஆட்சேபணை | நகல் |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** நான் சுமதி மற்றும் குமரன் என்பவர்களின் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பிரதிவாதி வாதிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம். இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கும் வழக்குரையில் நான் தான் கையொப்பம் செய்திருக்கிறேன். இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கிறேன் என்ற விபரங்கள் வாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, அவர்களுக்கு தெரியும். வழக்கு விபரங்களை வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். வாதி சுமதி மற்றும் குமரன் இருவரும் ஆண்டிபட்டியில் தான் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

2) ஆண்டிப்பட்டி தாலுகா மொட்டனூத்து கிராமத்தில் குடியிருக்கிறார்கள். வாதிகள் உள்ளூரில்தான் இருக்கிறார்கள் என்பதால் அவர்களை நேரடியாக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கலாம் என்றால் அவர்களால் நேரில் ஆஜராக முடியாததால் என்ன பவர்ஏஜெண்டாக என்னை நியமித்துள்ளார்கள். என்ன காரணத்திற்காக வாதிகளால் நேரில் ஆஜராக முடியாது என்று கேட்டால் அவர்களுக்கு பல வேலை இருக்கிறது. இந்த வழக்கை பார்த்துக் கொள்ள என்னை நியமித்திருக்கிறார்கள். வாதிகளை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்க தயாராக இருக்கிறோம் என்றால் இருக்கிறோம். பிரதிவாதி என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியும். பிரதிவாதி தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பதையும் பார்த்து தெரிந்து கொண்டேன்.

3) பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்கிறார் என்ற விபரமும், அவர் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்ற விபரமும் வாதி சுமதி மற்றும் குமரனுக்கு தெரியும். 2017ம் ஆண்டு நான் வழக்கு தாக்கல் செய்யும் போதே பவர் ஏஜெண்ட் என்ற முறையில் தான் இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஆனால் எனது பொது அதிகாரத்தை அங்கீகரிக்க கோரி 2025ம் ஆண்டில் தான் IA.8/25 என்ற மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த மனுவில் எதிர்மனுதாரர்கள் எந்த எதிருரையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் இருவரும் ஒரே பத்திரத்தின் மூலம் எனக்கு பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளாரா அல்லது தனித்தனி பத்திரம் எழுதி கொடுத்தார்களா என்றால் 2020ஆம் ஆண்டு ஒரே பத்திரத்தின் மூலம் எனக்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளார்கள்.

4) அந்த பொது அதிகாரப் பத்திரம் வாதி தரப்பு சான்றாவணம்.11 என்றால் சரிதான். மேற்படி பொது அதிகார பத்திரத்தின்படி நான் வாதிகளுக்காக வழக்கை நடத்த மற்றும் தாவா சொத்து சம்பந்தமாக பத்திரங்கள் பதிவு செய்ய மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் வாதிகளுக்காக சாட்சியமளிப்பதற்காக குறிப்பிட்டு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிப்பதற்காக குறிப்பிட்டு எந்த அதிகாரமும் அளிக்காததால் நான் இந்த வழக்கில் அளிக்கும் சாட்சி ஏற்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. எத்தனை இலக்க சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல்

செய்திருக்கிறேன் என்றால் ஒரு லக்க சொத்திறககாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். அந்த சொத்தின் சர்வே எண்.477/1B1 ல் கட்டுப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தை வாதி சுமதி, என்னிடமிருந்து தான் கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

5) மேற்படி சொத்தை நான் சுப்பையா மக்களிடமிருந்து பொது அதிகாரம் வாங்கி அதன் பேரில் வாதி சுமதிக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 மூலம் வாதி சுமதி எனக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தில் நான்குமால் எனக்கு தெரியும். வடக்கு – பாதை, கிழக்கு – பாதை, தெற்கு – குமரன் இடம், மேற்கு – மூக்கம்மாள் இடம். மேற்படி நான்குமாலை தான் இந்த வழக்கின் சொத்து விபரத்தில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் ஆமாம். 1 வது லக்க சொத்தை தான் சுமதிக்கு கிரையம் கொடுத்தேன். 2 வது லக்க சொத்தை குமரனுக்கு கிரையம் கொடுத்தேன். வா.சா.ஆ.4 சர்வே எண்.477/1 ல் ஏக்கர் 4 செண்ட் 36 ல் வடமேல்பக்கம் செண்ட் 76 ல் இதில் மேல்பக்கம் செண்ட் 38 ஐ அழகர்சாமி என்பவருக்கு சித்திரன்சாம்பான் என்பவர் 27.04.1959 ல் ஒத்தி பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

6) அந்த ஒத்தியை மீட்டதற்கு எந்த வரவும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வரவு வைத்திருந்தால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. சுமதி மற்றும் குமரன் இருவருக்கும் விற்கப்பட்ட மொத்த சொத்தின் நான்குமால் எனக்கு தெரியும். மேற்படி மொத்த சொத்தை சுப்பையன் அவரின் மூன்று மக்களுக்கு தானமாக எழுதிக் கொடுத்தது என்றால் சரிதான். அந்த தானப் பத்திரத்தின் அடிப்படையில் தான் சுப்பையா மக்கள் எனக்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரத்திலும் அவர்கள் சொத்தை இரண்டு அயிட்டங்களாக பிரித்து எனக்கு பவர் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, ஒரே பத்திரமாகத் தான் எழுதிக் கொடுத்தார்கள்.

7) மேற்படி பவர் பத்திரத்தில் சர்வே எண். 477/1 இல் 19 சென்டில் மேல் பக்கம் உள்ள காலியிடம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 19 சென்ட் நிலத்தில் எனக்கு எவ்வளவு சென்ட் நிலத்தை பொறுத்து அவர் எழுதி கொடுத்தார்கள் என்றால் 19 சென்ட் நிலத்திற்கும் எழுதி கொடுத்தார்கள். அந்த பத்திரத்தில் 7659 சதுர அடிக்கு தான் எனக்கு பவர் எழுதி கொடுத்திருக்கிறார்கள்

என்றால் சதுர அடி கணக்கு எனக்கு தெரியாது. அவர் பத்திரத்தில் என்ன இருக்கிறதோ அதை எழுதி கொடுத்திருக்கிறார்கள். மேற்படி மொத்த சொத்தையும் சுமதிக்கும், குமரனுக்கும் கிரையம் கொடுத்து விட்டேனா என்றால் இல்லை. சுமதிக்கு 5 செண்டு, குமரனுக்கு 5 சென்ட் நிலம் எழுதி கொடுத்தேன், மீதி நிலம் என்னிடம் இருக்கிறது. மீதியிடம் எந்த பக்கம் இருக்கிறது என்றால் தங்கவேல் இடத்திற்கு தெற்கு பக்கம் இருக்கிறது.

8) நான் சொல்வது போல் சுமதிக்கும், குமரனுக்கும் 10 சென்ட் நிலம் கொடுத்திருந்தால் மீதமுள்ள நிலத்திற்கு இடையில் தங்கவேல் வர முடியாது என்று சொன்னால் சரியல்ல. மீதியுள்ள இடத்தில் தங்கவேலுக்கு கிரையம் கொடுத்திருக்கிறேன். மேற்படி மொத்த 19 சென்ட் நிலத்திற்கான நான்கு மால் எனக்கு தெரியும். வடக்கு – பாதை, தெற்கு – உண்ணாமலை வகையறா இடம், மேற்கு – மூக்கம்மாள் இடம், கிழக்கு – பாதை. சுப்பையா மக்கள் எனக்கு எழுதி கொடுத்த பவர் பத்திரத்தில் 19 சென்ட் நிலத்தை இரண்டாக பிரித்து தான் எனக்கு நான்கு மால் காட்டி பவர் பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. ஒரே அயிட்டமாகத் தான் எழுதி கொடுத்திருக்கிறார்கள். மேற்படி பவர் பத்திரத்தில் சர்வே எண்.477/1B1 க்கு தனியாக நான்குமால் காட்டியும், சர்வே எண் 477/1B2 க்கு தனியாக நான்குமால் காட்டியும் எனக்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான்.

9) மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தில் சர்வே எண்.477/1B1 ல் கிழமேலடி 34 1/2 க்கு தென்வடலடி 171 க்கு கூடிய 5899 ½ சதுரடிக்கு தான் எனக்கு பவர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தில் சர்வே எண்.477/1B2 ல் கிழமேலடி 34 1/2 க்கு தென்வடலடி 51 க்கு கூடிய 1759 ½ சதுரடிக்கு தான் எனக்கு பவர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். கிழக்கு – பாதை, வடக்கு – உண்ணாமலையம்மாள் இடம், மேற்கு – மூக்கம்மாள் இடம், தெற்கு – சேர்வை இடம். சரியான சொத்து விபரம் தெரியாமல் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தின் படி சர்வே எண்.477/1B1 நம்பரில் 19 செண்டில் வடபுறம் கிழமேலடி 34 1/2, தென்வடலடி 57, மொத்த சதுரடி 1966 1/2 க் சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை –.2025 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open court on 25.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.09.25 12:56:54 +0530

District Munsif,
Aundipatti.